


**10.09. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளின் இடைத்தேர்தலில் போட்டியிடும் த.வெ.க வேட்பாளர்கள் இன்று அறிவிக்கப்பட்டுள்ளனர்.

2. முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் ஒருவார கால அரசு முறை பயணமாக இன்றிரவு லண்டன் புறப்படுகிறார்.

3. காச நோய் பாதிக்கப்பட்டவர்களின் சிகிச்சையில் ஊட்டச்சத்து முக்கிய பங்கு வகிப்பதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண் ராஜ் கூறியுள்ளார்.

4. தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியின் அரையிறுதியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

**************

## இடைத்தேர்தல் வேட்பாளர்கள்

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 6 ஆம் தேதி நடைபெறும் இடைத்தேர்தலுக்காக மதசார்பற்ற சமூகநீதி வெற்றி கூட்டணி சார்பில் த.வெ.க வேட்பாளர்கள் இன்று அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி மதுராந்தகம் தொகுதியில் திருமதி மரகதம் குமரவேலும்,

தாராபுரத்தில் திருமதி சத்தியபாமாவும் போட்டியிட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விருவரும் கடந்த சட்டமன்ற தேர்தலில் அஇஅதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றபின் தங்களது பதவியை ராஜினாமா செய்து த.வெ.க-வில் இணைந்ததால் இவ்விரு தொகுதிகளும் காலியானதாக அறிவிக்கப்பட்டது.

திமுக சார்பில் மதுராந்தகத்தில் திரு. ஐ.பரந்தாமனும்,

தாராபுரத்தில் திருமதி எஸ். சுகன்யாவும் இத்தொகுதிகளில் போட்டியிடுவாா்கள் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அஇஅதிமுக சாா்பில் இத்தொகுதிகளில் போட்டியிட விருப்ப மனுக்கள் அளிப்பதற்கான கால அவகாசம் இன்றுமாலை 6 மணியுடன் நிறைவடைகிறது.

வேட்பு மனு தாக்கல் நேற்று தொடங்கிய நிலையில் இதுவரை 3 சுயேட்சை வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்துள்ளனர்.

வரும் 16ஆம் தேதிவரை மனுக்களை தாக்கல் செய்ய கால அவகாசம் உள்ளது.

மனுக்கள் வரும் 17ஆம் தேதி பரிசீலிக்கப்படுகின்றன.

**************

டி.டி.வி. தினகரன்

தமிழக சட்டப்பேரவை இடைத்தேர்தலில் அஇஅதிமுக வேட்பாளர்களுக்கு ஆதரவு அளிப்பதாக அ.ம.மு.க பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் தொிவித்துள்ளாா்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், த.வெ.க அரசு முதிா்ச்சியற்ற தன்மையுடன் உள்ளதாக குறை கூறினாா்.

சென்னையில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த பட்டினப்பாக்கம் பகுதியில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில் தலைமை செயலகம் கட்ட அரசு முடிவெடுத்துள்ளதாக குற்றம் சாட்டினாா்.

நெல் கொள்முதல் செய்ய முடியாமல் அரசு உள்ளதாக கூறிய அவர், எந்த துறையிலும் வளர்ச்சிக்கான திட்டம் அரசிடம் இல்லை என்று தொிவித்தாா்.

இடைத்தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவது குறித்த கேள்விக்கு பதில் அளித்த அவர், இதுகுறித்து கூட்டணி கட்சி தலைவர்களிடம் கலந்தாலோசிக்கப்படும் என்றாா்.

**************

பறக்கும் படை

மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் தேர்தல் பறக்கும் படையினாின் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

முக்கிய சாலைகளில் தீவிர வாகன சோதனை மேற்கொள்ளப்படுகிறது.

தாராபுரம் அருகே உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட இரண்டு லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

**************

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் அரசு முறை பயணமாக இன்றிரவு லண்டன் புறப்படுகிறார்.

ஒருவார காலம் அங்கு தங்கும் அவர், முதலீட்டாளர்களை சந்தித்து தமிழகத்தில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்க உள்ளார்.

முதலமைச்சர் தலைமையில் உயர்நிலை பிரதிநிதி குழுவும் முதலீட்டாளர்களை சந்தித்து லண்டனில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள உள்ளது.

த.வெ.க அரசு பதவி ஏற்ற பின்னர் முதல் முறையாக முதலமைச்சர் அரசு முறை பயணமாக வெளிநாடு செல்வது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜூனா லண்டன் சென்றடைந்த நிலையில் தொழில் துறை அமைச்சர் செல்வி கீர்த்தனாவும் அங்கு செல்கிறார்.

**************

பிரிக்ஸ்

பிரிக்ஸ் உச்சிமாநாடு நாளை மறுநாள் புதுதில்லியில் தொடங்க உள்ள நிலையில் அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த மாநாட்டை ஒட்டி ட்ரோன் விமானங்கள் மற்றும் சிறிய ரக விமானங்கள் வானில் பறக்க வரும் 14ஆம் தேதிவரை டெல்லி போலீஸ் தடைவிதித்துள்ளது.

புலனாய்வு முகமையின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு குற்றவியல் தடுப்பு சட்டத்தின் கீழ் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் விதிகளை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று காவல்துறை எச்சரித்துள்ளது.

இந்நிலையில் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக எத்தியோப்பியா, புருண்டி நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இன்று புதுதில்லி வந்தடைந்தனர்.

**************

ராஜ்நாத்சிங்

ஜப்பான் பாதுகாப்பு பிரிவு போர் விமானம் இந்தியாவிற்கு வருகை தந்துள்ளது இரு நாடுகளிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பிற்கு மைல் கல்லாக திகழ்கிறது என்று அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் அமைதியையும், ஸ்திரதன்மையையும், நிலைநாட்டுவதற்கான அர்ப்பணிப்பையும் இதுபுலப்படுத்துவதாக சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் **Shinjirō Koizumi**-யுடன் புதுதில்லியில் சென்றமாதம் நடைபெற்ற உயர்நிலை பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

**************

## அருண் ராஜ்

நாமக்கல் மாவட்டத்தில் தேசிய காச நோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ் 820 மருத்துவ பயனாளிகள் தற்போது சிகிச்சை பெற்று வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண் ராஜ் தெரிவித்துள்ளார்.

திருச்செங்கோடு அரசு மருத்துமனையில் பயனாளிகளுக்கு ஊட்டசத்து பெட்டகங்களை இன்று வழங்கி பேசிய அமைச்சர் காசநோய் பாதிக்கப்பட்டவர்களின் சிகிச்சையில் ஊட்டசத்து முக்கிய பங்கு வகிப்பதாக எடுத்துரைத்தார்.

காசநோயாளிகள் 6 மாதங்களுக்கு தொடர்ந்து மாத்திரைகளை உட்கொள்வது அவசியம் என்று குறிப்பிட்ட அவர், மாத்திரை மருந்துகளை தன்னிச்சையாக நிறுத்தினால் நோய் தீவிரம் அடையும் அபாயம் ஏற்படும் என்றும் உடலில் எதிர்ப்பு திறனை இழக்க நேரிடும் என்றும் எச்சரித்தார்.

எனவே நோயாளிகள் பரிந்துரைக்கப்பட்ட முழு கால அளவில் மருந்துகளை உட்கொள்ள அமைச்சர் அறிவுறுத்தினார்.

**************

## உச்சநீதிமன்றம்

சமூகவலைதளங்களை இளையோர் பயன்படுத்துவதற்கான பாதுகாப்பு வழிமுறைகளை மேற்கொள்வதன் அவசியம் குறித்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உச்சநீதிமன்றம் ஒப்புக்கொண்டுள்ளது.

தலைமை நீதிபதி சூரியகாந்த் தலைமையிலான அமர்வு இதுதொடர்பான நோட்டிஸை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது.

இந்திய சட்டம் 18 வயதிற்கு கீழ் உள்ளவர்களை மைனர் என்று கருதும் நிலையில் முகநூல், Snap chat போன்ற தளங்கள் 13 வயதுடையவர்களை கணக்கு தொடங்க அனுமதிப்பதாக அந்த மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

**************

## உலக தற்கொலை தடுப்பு தினம்

உலக தற்கொலை தடுப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மன நல ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை உலகம் முழுவதும் ஏற்படுத்தும் வகையில் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

இதையொட்டி தர்மபுாி மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திரு.சரவணன் தொடங்கிவைத்தாா்.

மன அழுத்தம், மற்றும் நெருக்கடியில் இருப்பவர்களுக்கு உரிய நேரத்தில் ஆதரவு வழங்குவதன் அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தொாிவிக்கிறாா்.

**************

விருதுநகர்

விருதுநகர் மாவட்டத்தில் வளர்ச்சி அடைந்த பாரதம் இளையோாா் உரையாடல் வினாடி வினா போட்டியில் திரளான மாணவர்கள் கலந்துகொள்ள வேண்டும் என்று மாவட்ட இளைஞர் நல அலுவலர் காவ்யா முத்து லெட்சுமி கேட்டுக்கொண்டுள்ளாா்.

விருதுநகாில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், முதற்கட்டமாக 15 முதல் 25 வயதுவரை உள்ளவர்களுக்கு இணையதளம் வாயிலாக வினாடி வினா போட்டி நடைபெறுவதாக கூறினாா்.

**************

இருவரி

விருதுநகாில் போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளி மாணவிகள் பதாகைகளை ஏந்திய வண்ணம் பங்கேற்று பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

நாமக்கல்லில் மாவட்ட காவல்துறை மற்றும் கல்வி நிறுவனங்கள் பங்கேற்ற போதை பொருள் தடுப்பு விழபப்புணர்வு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட எயிட்ஸ் தடுப்பு கட்டுப்பாட்டு அலகு சாாா்பில் மாணவ மாணவியர் பங்கேற்ற எயிட்ஸ் தடுப்பு மனித சங்கிலியை ஆட்சித்தலைவர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா துவக்கிவைத்தாா்.

இதன் ஒருபகுதியாக HIV தொற்று சுய பாிசோதனைக்கான QR குறியீடும் வெளியிடப்பட்டது.

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் மின்நுகர்வோாா் குறைதீர் நாள் கூட்டம் நாளை நடைபெறுகிறது.

மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உண்டியல் காணிக்கையாக 93 லட்சத்து 28 ஆயிரம்

ரூபாய் ரொக்கமும், 147 கிராம் தங்கமும், 2 கிலோ வெள்ளியும் கிடைக்கப்பெற்றுள்ளதாக கோவில் நிா்வாகம் தொிவித்துள்ளது.

**************

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கான சிறப்பு சுகாதார விழிப்புணர்வு முகாம் 90 இடங்களில் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி சினேகா தொிவித்துள்ளாா்.

விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போா் தங்களது கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க இம்முகாமை பயன்படுத்திக்கொள்ளலாம் என்று எமது செய்தியாளர் தொிவிக்கிறாா்.

**************

வானிலை

மன்னாா் வளைகுடா வரை தமிழக பகுதிகள் வழியாக காற்றழுத்த தாழ்வுபாதை நிலவுவதால் தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தொிவித்துள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் சென்னை செங்கல்பட்டு காஞ்சிபுரம் திருவள்ளூர் விழுப்புரம் கள்ளக்குறிச்சி கடலூர் சேலம் நாமக்கல் ஈரோடு திருச்சி அரியலூர் பெரம்பலூர் புதுக்கோட்டை மதுரை விருதுநகர் சிவகங்கை மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

**************

மகளிா் கிரிக்கெட்

ஆசிய கோப்பை மகளிா் 20-20 கிரிக்கெட் போட்டியின் அரையிறுதியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிா்கொள்கிறது.

துபாயில் இன்றிரவு 8 மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

நாளை நடைபெறும் மற்றொரு அரையிறுதியில் இலங்கை – பாகிஸ்தானுடன் மோதுகிறது.

இறுதி போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது